# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை


லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.


பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
📞 77088-21464, 85084-84583.
✉ arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. |ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூ | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஶ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள்

வேணுகோபால்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

**வண்ணநிலவன் பற்றிய குறிப்புகள்**

தமிழ் இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளராகத் திகழ்பவர் வண்ணநிலவன் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதி திருநெல்வேலியில் பிறந்தவர். தந்தையின் பெயர் உலகநாதன், தாயார் பெயர் ராமலட்சுமி அம்மாள் பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் ராமச்சந்திரன்.

கடல்புரத்தில் நாவல் இலக்கியம் சிந்தனை விருதையும் தர்மம் சிறுகதை தொகுதி தமிழக அரசின் விருதையும் பெற்றுள்ளது மற்றும் புதுதில்லி ராமகிருஷ்ண ஜெய்தயாள் மனிதநேய விருதையும் சாரல் இலக்கிய விருதையும் பெற்றுள்ளார்.

இவரது ஒரு சில படைப்புகள் ஆங்கிலம், இந்தி, மலையாளம், ஜெர்மன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கண்ணதாசன், கணையாழி, புதுவைக்குரல், அன்னைநாடு, துக்ளக், சுபமங்களா போன்ற பத்திரிக்கைகளின் குழுவில் பணியாற்றியுள்ளார்.

**முன்னுரை**

இலக்கியங்கள் காலத்தை காட்டும் கண்ணாடி எனக் கூறலாம். அவ்விலக்கியங்களில் சிறுகதையும் அடங்கும். "சிறுகதைகள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் பிம்பம்" எனலாம். சிறுகதைகள் தனிமனிதன், குடும்பம், கூட்டுக் குடும்பம், சமூகம், குடும்பச் சிக்கல்கள், சமுதாயச் சிக்கல்கள், பொருளாதாரச் சிக்கல்கள், வறுமை போன்ற பல சமுதாயப் பதிவுகளை எடுத்துக் காட்டுகின்றன.

வண்ணநிலவன் சிறுகதைகளில் யுகதர்மம், அயோத்தி என்னும் இரண்டு கதைகளில் உள்ள பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**யுகதர்மம்**

முதிர்கண்ணியின் வாழ்வினையும் வறுமை சூழ்நிலையினையும் எடுத்துக்காட்டுவதாக இக்கதை விளக்கப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர் உதவியாளராக ஈஸ்வரமூர்த்தி பிள்ளை இருபது ரூபாய் காசுக்காக

பணிபுரிகிறார். அவருக்கு பணம் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. குடும்பத் தேவைக்காக கூடுதலாக பணம் பெறுகிறார்.

ஈஸ்வரமூர்த்தி பிள்ளைக்கு மூன்று பெண்கள், ஒரு பையன் மூத்த பெண் சாந்தா இருபத்தைந்து வயது நிறைவடைகிறாள். தன் தாய்க்குப் பின் வீட்டுப் பொறுப்பையும் கவனித்து வருகிறாள். சாந்தாவைப் பற்றியும் அவளது திருமணம் பற்றிய நினைவுகளும் அவருக்குப் பிரச்சனையாகத் தெரிகின்றது. சுயநலவாதிகள் சாந்தாவை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொள்வதற்குப் பெண்ணைக் கேட்கின்றனர். ஈஸ்வரமூர்த்தி பிள்ளைக்குச் சாந்தாவை மறுமணம் செய்து தருவதில் விருப்பமில்லை.

சில நேரங்களில் விபரீதமான எண்ணங்கள் தோன்றுகின்றன. தன் மகள் காதல் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறார. அதே போல் அவருடைய மகளும் காதல் திருமணம் செய்து கொள்கிறாள்.

"எதுக்குவே பெட்டிஷன் இங்கப் பாரும். பிச்சை எடுக்கிறது தான் தப்புவே. அதைத் தவிர என்ன செஞ்சாலும் குத்தம் இல்லைம்பேன் வயத்துப் பாட்டுக்காகத்தானவே இப்படி நாயா அலையுதோம்.... சவம்... எங்கையும் இருந்திட்டுப் போகுது. பொறகு எத்தனை நாளைக்கித்தான் அது மனசை அடக்கிக்கிட்டு இருக்கும். தெருவுல எத்தனை கல்யாணம் நடக்குது? எவ்வளவு கல்யாணம் ஊர்வலம் போகுது? இதையெல்லாம் பார்த்துக்கிட்டு எவ்வளவு நாளைக்கிவே வீட்டுக்குள்ளளேயே கெடக்கும்? இதைக் கவனிச்சு தாய் தகப்பனுங்க ஏதாவது செய்யணும் இல்லேன்னா இப்படித்தான் சும்மாவே சாப்பிடுதோம்? உப்பு போட்டுல்லா சாப்பிடுதோம். எப்படி உணர்ச்சி செத்துப் போகும்னேன் என்று ஆத்திரத்துடன் பேசி முடிக்கின்றார் வழக்கறிஞர் உதவியாளர்." தன் மகளைப் பற்றி தவறாகப் பேசும் மக்களிடம் தனது மகளுக்குத் திருமணம் நடைபெற்று விட்டது என்று ஆறுதல் கூறிக் கொள்ளுகிறார். வறுமையில் வாழ்கின்ற குடும்பத்திலுள்ள பெண்களுக்குத் திருமணம் எட்டாத கனியாக இருக்கின்றது என்பதை இக்கதை மூலம் அறிய முடிகிறது.

**அயோத்தி**

பெண்ணின் வாழ்வில் ஏற்படும் அவலங்களைச் சுட்டுவதாக இக்கதை படைக்கப்பட்டிருக்கின்றது.

சந்திரா பள்ளியில் ஆசிரியையராகப் பணிபுரிபவள். அப்பணியில் போதுமான அளவு வருமானம் கிடைக்காததால் குழந்தைக்குப் பால் வாங்குவதற்குக் கூட இயலாத நிலையில் வறுமை ஏற்படுகின்றது. வீட்டுக்கார அம்மாள் பணம் தருகிறாள். அந்தப் பணத்தைக் கணவனிடம் கொடுத்து குழந்தைக்குப் பால் வாங்குவதற்குக் கடைக்கு அனுப்புகிறாள் சந்திரா. அவன் பால் வாங்காமல் திரும்பி விடுகின்றான். தன் கணவன் மேல் அவளுக்கு ஆத்திரமும் கோபமும் உண்டாகிறது. ஒரு நாள்

விடுமுறையில் கூட தன்னால் நிம்மதியாக வீட்டில் இருக்க முடியவில்லை என்று எண்ணுகிறாள்.

குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் சந்திரா இருக்கிறாள். எனவே பெற்றோரையும் நொந்து கொள்ளும் சந்திரா,

“சண்டாளப் பாவியோ இப்படி என்னயக் கொண்டு போயி பாழுங் கெணத்துல தள்ளுன மாதிரி பண்ணிட்டாங்களே பணத்துக்கு ஆசைப்பட்ட கொள்ளைக்கார பாவியோ என்னயப் பாழாக்கிட்டாங்களோ ஓ.... ஓ...!!”

பாஸ் அவளுக்குத் தாய்மாமன். பாஸ் வசதி குறைவான நிலையில் அவனது குடும்பநிலை இருக்கின்றது. மாப்பிள்ளைக் கல்வி கற்றவர். அதிகமாக வரதட்சனை வேண்டாம் என்று மாப்பிள்ளை வீட்டார் கூறியதால் சந்திராவின் அப்பா திருமணம் செய்து தருகிறார். இவனோடு வாழ்ந்த வாழ்க்கையில் வறுமை நிலையில் வாழ்ந்து துன்பப்பட வேண்டியுள்ளது என்று நினைக்கிறாள்.

சமாதானம் அடைய முடியாத சந்திரா தன் பழைய நினைவுகளை அசை போடுகிறாள். சந்திரா தன் திருமண வாழ்க்கையைப் பற்றி எதிர்பார்ப்புடன் கனவுகள் கண்டிருந்தாள். அதற்கு மாறாக நடந்ததால் வாழ்க்கையில் வெறுப்பு கொள்கிறாள்.

**பொருளாதாரச் சிக்கல்**

வறுமை காரணமாகவே அனைத்து குடும்பங்களிலும் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. “வறுமை என்பது மனித நிலைப்பட்ட வாழ்வுக்கு வேண்டிய பொருளியல் தேவையாகும். உயிரோடு வாழ்வதற்கு வேண்டியவை இருப்பினும் சமூகத்தின் பெரும்பான்மையான கூட்டத்தினர், நியாயமான செம்மையான வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டியவையெனக் கருதுவன இல்லையெனில் அந்நிலையை வறுமை அதாவது தேவைகள் வற்றிய நிலை எனக் கொள்வதுண்டு” என்பர் ராஜ்குமார். தற்காலத் தமிழ் இலக்கியத்தில் வறுமையும் சாதியமும். ப. 6

“சமூக அமைப்பில் பொருளாதார வேறுபாட்டின் காரணமாக வறுமை பெரிய சிக்கலாக உள்ளது” என்பர் வாழ்வியல் களஞ்சியம். (தொ 8) ப.528.

**போதிய வருமானம் இன்மை**

சந்திரா பள்ளி ஆசிரியையராகப் பணிபுரிபவள். ஆசிரியைத் தொழிலில் போதுமான அளவு வருமானம் கிடைக்காததால் குழந்தைக்குப் பால் வாங்குவதற்குக் கூட இயலாத நிலையில் வறுமை ஏற்படுகின்றது. வீட்டுக்கார அம்மாள் பணம் தருகிறாள். அந்தப்

பணத்தைக் கொண்டு குழந்தைக்குப் பால் வாங்குவதற்குக் கணவனை அனுப்பி வைக்கிறாள்.

**குடும்ப பாரச்சுமை**

வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள் காய்கறிகள் முதல் வண்ணான் கடை வரை அவள் சென்று வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. கணவன் பொருட்களின் விலை நிலவரம் எதுவும் அறியாதவனாக இருக்கிறான். குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் சந்திரா இருக்கிறாள். எனவே குடும்பப் பாரச்சுமை காரணமாக பெற்றோரை நொந்து கொள்கிறாள் சந்திரா.

**போதிய வருமானம் கிடைக்காமை**

வழக்கறிஞர் உதவியாளராக ஈஸ்வரமூர்த்தி இருபது ரூபாய் காசுக்காக பணிபுரிகிறார். அவருக்கு பணம் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. குடும்பத் தேவைக்காக கூடுதலாக பணம் பெறுகிறார். " பெரிசுக்கு ஒரு ரிப்பனும் அடுத்த நடுவுள்ளது இரண்டுக்கும் கண்ணாடிக் கல் மாலையும் சின்னப் பயலுக்கு ஒரு பென்சில் குச்சியும் வாங்க வேண்டும் என்று மனதில் எண்ணிக் கொள்கிறார். அரிசியில் பாதி மண் விழும் என்று தெரிந்திருந்தும் எம் புள்ளைகளுக்கு நான் வாங்கிக் கொடுக்காமல் யார் வாங்கிக் கொடுப்பா? என்று பெருமையாக மனதில் நினைத்துக் கொள்கிறார்".

**வறுமை**

ஈஸ்வரமூர்த்தி பிள்ளைக்கு மூன்று பெண்கள் ஒரு பையன் மூத்த பெண் சாந்தா இருபத்தைந்து வயது நிறைவடைகிறாள். தன் தாய் இறப்புக்குப் பின் வீட்டுப் பொறுப்பைக் கவனித்து வருகிறாள். சாந்தாவைப் பற்றியும் அவளது திருமணம் பற்றிய நினைவுகளும் அவருக்குப் பிரச்சனையாகத் தெரிகின்றது. ஈஸ்வரமூர்த்தி பிள்ளையின் குறைவான வருமானத்தால் மகளுக்கு திருமணம் செய்ய முடியாத நிலையையும் வறுமையையும் எண்ணித் தன் மகள் காதல் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகினறார். அவர் எண்ணியதைப் போலவே அவர் மகளும் காதல் திருமணம் செய்து கொள்கிறாள்.

**முடிவுரை**

வண்ணநிலவன் சிறுகதைகளில் யுகதர்மம் அயோத்தி என்னும் இரண்டு கதைகளிலும் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. குறிப்பாக வறுமை போதிய வருமானம் இன்மை குடும்பப் பாரச்சுமை முதிர் கன்னியின் வாழ்வு வறுமைச் சூழ்நிலை குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் ஏற்று மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு சமுதாயப் பதிவுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்